முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1684

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.05.2024,** வியாழக்கிழமை

1. பிரணவ சக்திமிகு ராஜனே
   பிரம்ம ரகசியம் அறிந்த குருராஜனே
   வரம்பல என்பால் பெற்று
   வல்லமைபட என் சக்தியாக வையகத்தில் அவதரித்த
2. அவதரித்த ஆறுமுக அரங்கனே
   அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   வரமென ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 26 ம் நாள், 09.05.2024, வியாழக்கிழமை)
   வழங்குவேன் அரங்கன் உன் புகழ் உலகறிய
3. அறியவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   வையகத்தை காக்க வந்த மாதவசி
   அறம்கொண்டு உலகோர்க்கு மாற்றம்
   அகத்தியர் சன்மார்க்க சங்கமாக படைத்து
4. படைத்துமே அருளுகின்ற அரங்கன்
   உண்மைவழியே அகிலத்தை மாற்றும் ஞான வழி
   வரமாக அரங்கன் குலம் அகத்தியர் குலமாக
   வையகத்தை வரும் காலம் வலம் வந்து
5. வந்துமே உலகெலாம் ஒரு உளமாக
   ஓங்கார ஞான பலம் கொண்ட தர்மலோகமாக
   தரணியை காக்கவல்ல தவராஜன்
   தொண்டர்படைகள் நிரம்பிய
6. நிரம்பிய ஞான லோகமாக
   நிலவுலகை ஞானிகள் ஆளவருகின்ற
   ஞான சித்தர் காலமாக
   ஞான ஆட்சிக்குறிய உயர்வான சூழலாக மாறி

7. நாட்டிடுவேன் அரங்கன் கொள்கையாலும்
ஆற்றல்மிக்க அரங்கன் தர்மத்தாலும்
இந்த அற்புதம் உலகம் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—